(ஊ) திருவாரூர் மாவட்ட மைய நூலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்ட மைய நூலகத்திற்கு 2003 ஆம் ஆண்டு 37,200 சதுர அடி இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் கட்டடமும் கட்டப்பட்டு, நூலகம் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் கூடுதல் கட்டடம் வேண்டுமென அங்கேயிருந்து கோரிக்கை அனுப்பப்பட்டு,* estimate*-ம் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 17,000 சதுர அடி இடத்தை மாவட்ட நிர்வாகம் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல், திரும்ப எடுத்துக்கொள்வதற்கு ஓர் ஆணை பிறப்பித்திருக்கிறது. இந்த ஆணையை இரத்து செய்ய வேண்டும். அந்த இடத்தில் உடனடியாகக் கூடுதல் நூலகக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

(எ) நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் தொகுதி, நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதியில் ஏற்பட்டிருக்கக்கூடிய குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பொறுத்தவரையில், இங்கிருந்து அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்யப்பட்டது. அங்கு, ஏற்கெனவே வருகிற தண்ணீர் குறைந்துவிட்ட காரணத்தால், தற்போது*

2023 ஏப்ரல் 21] *[திரு. கே.என். நேரு]*

மோட்டார் பம்ப் மூலமாக இறைத்துக் கொடுக்கிற வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாநகராட்சி முழுவதும் தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் கொடுப்பதற்கு புதிய திட்டம் ஒன்று AMRUT திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 296.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தத் திட்டம் எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கவிருக்கின்றன. எனவே, இந்த வெயில் காலத்தினைச் சமாளித்திடும் வகையில், மோட்டார்மூலம் அனைத்துப் பகுதிகளுக்கும் தண்ணீர் கொடுக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஏ) கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்கள், மின் வேலியால் யானைகள் உயிரிழப்பதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில், யானை வழித்தடங்களில் மின் வேலிகள் அமைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், அவ்வழித்தடங்களில் செல்லக்கூடிய யானைகள் மின்வேலியில் மின்சாரம் தாக்கி அடிபட்டு இறந்துவிடுகின்றன. அதோடுமட்டுமல்ல, அந்த இரண்டு மாவட்டங்களில் தொடர்ச்சியாக மர்மமான முறையிலும் பல யானைகள் இறந்திருக்கின்றன. இனி, அவ்வாறு யானைகள் இறக்காமல் அவற்றைக் காப்பாற்றுகின்ற வகையில், நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

(ஊ) திருவாரூர் மாவட்ட மைய நூலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்களின் கோரிக்கைக்கு பதில் சொல்லவிருக்கிறார்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரையுடன் இந்தக் கூட்டத் தொடர் நிறைவடையவிருக்கின்ற இந்த வேளையில், நன்றியைச் சொல்லி என்னுடைய பதிலைக் கூற நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2023 ஏப்ரல் 21

நேற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் சமூக நீதி பாதுகாவலர், ஜனநாயகப் பாதுகாவலர் அவர்களுடைய விதி 110-ன்கீழான அறிவிப்பிற்கு, கல்வியில் இட ஒதுக்கீட்டைப் பெற்றிருக்கின்ற அனைவருடைய சார்பாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழால், தமிழினத்திற்காக, தமிழகத்தை ஐந்து முறை ஆண்டவர், கலைஞர் அவர்கள். தமிழால் தமிழினத்திற்காக தமிழகத்தை ஐந்து முறை ஆண்டவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்து முறைதான் ஆண்டாரா ? ஐந்து முறைதான் ஆண்டாரா ? இதோ, ஆறாவது முறையும் அவரே ஆளுகிறார்; இந்த அறிவிப்பின்மூலம் அவரே வாழ்கிறார் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பொறுத்தமட்டில், திருவாரூர் மாவட்டத்திற்கு மாவட்ட மைய நூலகம் அமைக்க நகரத்தினை ஒட்டி, திருவாரூர் வட்டம், விஜயபுரம், கிராம வார்டு சர்வே எண் 35-ல் உள்ள 0.32.78 ஹெக்டேர் அரசு புன்செய் நிலத்தில் நூலகக் கட்டடம் கட்ட முன்நுழைவு அனுமதி வழங்கி, திருவாரூர் மாவட்ட ஆட்சியரால் 27-3-2003-ல் ஆணை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேற்சொன்ன இடத்தில், திருவாரூர் மாவட்ட மைய நூலகம் கட்டும் பணி தொடங்கப்பட்டு, 6-9-2006 அன்று தற்போதைய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது திறக்கப்பட்டது. தரைத்தளத்தில் 5,000 சதுர அடி மற்றும் முதல் தளத்தில் 5,000 சதுர அடி என மொத்தம் 10,000 சதுர அடி பரப்பளவில் அந்த நூலகம் இயங்கி வருகிறது. இந்நூலக தரைத்தளக் கட்டடத்தில் நாளிதழ், பருவ இதழ் பிரிவு, நூல் இரவல் பிரிவு, புதிய நூல்கள் பிரிவு, மாற்றுத் திறனாளிகள் பிரிவு மற்றும் முதல் தளத்தில் சொந்த நூல்கள் பிரிவு, செவி மற்றும் பேச்சுத் திறன் குறைபாடு உடையவர்களுக்கான சிறப்புப் பிரிவு, குடிமைப் பணி பிரிவு மற்றும் குற்ற உதவிப் பிரிவு ஆகிய பிரிவுகளுடன் இந்நூலகமானது சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 16-12-2021 அன்று அந்த நூலகத்தை ஆய்வு செய்ய நான் நேரடியாகச் சென்றேன். அங்கு மராமத்துப் பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து அறிந்து, ஏறத்தாழ 31.1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தற்போது புதுப்பிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

2023 ஏப்ரல் 21] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

நிலமாற்ற தலமான சர்வே எண் 35, அரசு புன்செய் தரிசு நிலம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சர்வே எண் நாகப்பட்டினம்–தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையையொட்டி அமைந்துள்ளது. இத்தலத்தின் வடக்கில் சர்வே எண் 36–ல் அருள்மிகு தியாகராஜ சுவாமி ராஜன் கட்டளைக்குச் சொந்தமான 3,250 சதுர மீட்டர் பரப்பளவில் புறவழிச் சாலையிலிருந்து தென்பகுதி ஓரமாக 100 மீட்டர் தூரத்திற்கு அணுகு சாலை தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலை தொடர்ச்சியாக நில மற்றும் சர்வே எண் 35 வழியாக நூலகக் கட்டடம் வரை செல்கிறது. இந்தத் தார்ச் சாலையின் இருபுறமும் மற்றும் நூலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தைச் சுற்றிலும் நூலகத் துறையால் முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது. நூலகம் அமைவதற்குமுன் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ள இடம் பொதுப் பாதை மற்றும் வண்டிப் பாதையாக பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. இதன் வழியாகவும் மற்றும் மாவட்ட நூலகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் வழியாகவும் விவசாய நிலங்களுக்குச் செல்ல பாதை வசதி இருந்து வந்துள்ளது.

நூலகத் துறையினால் அமைக்கப்பட்ட முள்வேலியினால், மைய நூலகத்தின் வடபுறம் மற்றும் தென்புறம் உள்ள குடியிருப்புகளுக்குச் செல்லும் பாதையும் தடைபட்டுள்ளதால் அப்பகுதியைச் சுற்றியுள்ள பொதுமக்கள் மற்றும் தனி நபர்கள், தங்களது பட்டா நிலங்களுக்குச் சென்று வர பாதை வசதி கோரி தொடர்ந்து வலியுறுத்தி வந்ததால், மேற்கூறிய சர்வே எண்களுக்கு உரிய பாதை வசதி ஏற்படுத்திட ஏதுவாக, தற்போது நூலகம் அமைந்துள்ள இடத்தை மறுஅளவீடு செய்து திருவாரூர் வருவாய் கோட்ட அலுவலரிடமிருந்து வரப்பெற்ற அறிக்கையின்படியும் 8–10–2022 அன்று திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலரின் சர்வே inspection *அடிப்படையிலும், 10–11–2022 அன்று திருத்திய நிலமாற்ற ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

முற்பகல் 10–20

திருவாரூர் மாவட்ட நூலகத்திற்கு வழங்கப்பட்ட இடத்தில் நாகப்பட்டினம்...(மணியடிக்கப்பெற்றது) உடனே முடித்துவிடுகிறேன். திருவாரூர் மாவட்ட நூலகத்திற்கு வழங்கப்பட்ட இடத்தில் நாகப்பட்டினம்–தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து மாவட்ட நூலகத்திற்குச் செல்வதற்காகவும், பொது மக்கள் இந்த சர்வே எண் பின்புறமுள்ள குடியிருப்பு மற்றும் நஞ்சை நிலங்களுக்குச் செல்ல

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2023 ஏப்ரல் 21

ஏதுவாகவும் பொதுப் பாதை பயன்பாட்டிற்காக 0.3.5 ஹெக்டேர் இடம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்ட நூலகத்தின் இடம் எதுவும் கையகப்படுத்தப்படவில்லை. மாவட்ட நூலகத்திற்கு சர்வே எண் 35/3–ல் 0.1.5.4 ஹெக்டேர் இடமானது அளிக்கப்பட்டுள்ளது. பாதையின் இருபுறமும் மீதமுள்ள நிலங்கள், புஞ்சை தரிசு என்ற வகைப்பாட்டில் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்நிலையில் மாவட்ட நூலகத்தினை விரிவாக்கம் செய்திட, கூடுதல் நிலம் வழங்கிட கோரி, இன்றுவரை கோரிக்கை மனு ஏதும் வரப்பெறவில்லை. பின்னர், கோரிக்கை வரப்பெற்றால், அதே சர்வே எண்ணில் மீதமுள்ள புஞ்சை தரிசிலிருந்து நிலமாற்றம் செய்திட மாவட்ட நிருவாகத்தால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஐ) வால்பாறை தொகுதி, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட தினக்கூலியை நடைமுறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* T.K. *அமுல் கந்தசாமி அவர்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறை தொகுதியில் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு தினக்கூலியாக 425 ரூபாய் 40 காசு என்று அறிவிக்கப்பட்டு, இதுநாள்வரை அரசிதழிலும் வெளியிடப்படவில்லை; இதை நடைமுறைப்படுத்தவுமில்லை என்பதை அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

(ஒ) கீழ்வேளூர் தொகுதி, விவசாயக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டுமென்பது எங்களுடைய நீண்ட நாள் கனவு, 10 ஆண்டுக் கால கனவு. அந்தக் கனவை நிறைவேற்றி, கீழ்வேளூரில் விவசாயக் கல்லூரி தந்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு*